Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 212

செவ்வாய்க்கிழமை
25 ஜூன் 2024

ஆனி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



“அப்ப எல்லாக் கம்பஸுக்கையும் இனிமேல் ஆமிக்காரர்தான் சோதினை வைக்கப்போயினமோ?”

# ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 25
கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தொடர்பில் உடனடித் தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரி நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தால் அந்தப்பகுதியில் சுமார் ஏழு மணித்தியாலங்கள் போக்குவரத்துத் தடைப்பட்டது.
11



## புலிகள் இல்லாக் காலத்தில்

# பொதுவேட்பாளரே தமிழரின் ஆயுதம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25
தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இருந்தது. ஆனால், இப்போது எமக்கான எந்தப் பாதுகாப்பும் இல்லை. அதனால் எமது இனத்தை தங்களின் காலடியில் வீழ்த்திவிடலாம் என பேரினவாதிகள் மனப்பால் குடிக்கின்றனர். ஆனால், அதனை முறியடித்து, புலிகள் இல்லாத இந்தக் காலத்தில் எமது புதிய ஆயுதமாக பொதுவேட்பாளர் விடயத்தைக் கையாள்வோம்.
11

## மாணவி மீது சேஷ்டை; ஓட்டோச்சாரதி கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 25
பாடசாலை மாணவியொருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த முச்சக்கரவண்டிச் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்
11

## விஜயதாஸ விரைவில் ‘அவுட்’!

யாழ்ப்பாணம், ஜூன் 25
நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச விரைவில் அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்படலாம் என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எனினும், ஜனாதிபதி அவ்வாறான
11

## மாணவனுக்கு ‘பளார்’!

முல்லைத்தீவு, ஜூன் 25
முல்லைத்தீவு நகரப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் மாணவர் ஒருவரின் கன்னத்தில்,
11

## பந்தாடியது பஸ்; இளைஞர் பலி!

மன்னார், ஜூன் 25
மன்னார் - முருங்கன் ரயில் கடவை பகுதியில் பேருந்தும் மோட்டார் சைக்கிளும்
11



## 204 இந்திய மீனவர்கள் இவ்வருடம் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 25
இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 204 இந்திய மீனவர்கள் 27 படகுகளுடன்
11

## புறக்கணிப்பு இன்றுடன் முடிவு?

யாழ்ப்பாணம், ஜூன் 25
தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால், இன்று முதல் தமது வேலை நிறுத்தப்போராட்டத்தை கைவிட்டு போவதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.
11

## 9 பவுண் நகை பறிபோனது!

யாழ்ப்பாணம், ஜூன் 25
அச்சுவேலி, பத்தமேனிப் பகுதியில் வீட்டின் கதவை உடைத்துச் சென்று, 9 பவுண் நகைகள் திருடப்பட்டுள்
11

## ஆடைத்தொழிற்சாலையில் கருச்சிதைவு?

கிளிநொச்சி, ஜூன் 25
கிளிநொச்சியில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கருச்சிதைவு செய்யப்பட்ட எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இது குறித்து நேற்று விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்
11

## காரைநகரில் - மினிசூறாவளி; நேற்று கதகளி!

### குடிசைமீது வீழ்ந்தது பனை குடும்பமொன்று அருந்தப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
காரைநகரில் நேற்றுத் திடீரென வீசிய ‘மினி’ சூறாவளிக் காற்றால் ஓலைக் குடிசை மீது பனைமரம் முறிந்து வீழ்ந்ததில், சிறுவனொரு
11



## பல்கலைக்கழகங்களை பாதுகாக்குக!

### பாதுகாப்பு அமைச்சுக்கு அவசரக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25
கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக செயலிழந்து போயுள்ள பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பை
11

## படைமுகாமுக்குள் திடீர் தீப்பரவல்!

யாழ்ப்பாணம், ஜூன் 25
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு அண்மையாக அமைந்துள்ள இராணுவத்தினரின் முகாம் ஒன்றின்
11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிங்களப் பாடசாலைகள்!

## அமைக்கக் கோருகின்றது சுயாதீன எதிரணி

கொழும்பு, ஜூன் 25

**நாட்டில் 25 மாவட்டங்களிலும் தமிழ்மொழிமூல ஆரம்ப வகுப்பு பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களமொழி மூலப் பாடசாலைகள் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது. இது இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை சீர்குலைக்கும்.**

-இவ்வாறு சுயாதீன எதிரணியின் உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர்க்காலத்திலும் கூட கொழும்பு றோயல் கல்லூரியில் தமிழ்மொழி மூலம் வகுப்புகள் இடம்பெற்றன. கடந்த 5 வருடங்களை எடுத்துக் கொண்டால் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படும்போது 25 மாவட்டங்களிலும் தமிழ்மொழிமூல வெட்டுப்புள்ளிகள் வெளியாகின்றன.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள பின்னரும் கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சிங்கள வெட்டுப்புள்ளிகள் கிடையாது. வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களமொழிமூலம் ஆரம்பக் கல்வி பாடசாலைகள் இல்லை என்பதனையே இது காட்டுகிறது. இப்படி இருக்கையில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை எவ்வாறு உருவாக்கமுடியும்? - என்றார். (ச-இ)

## கழுதைப் பாலின் சத்து தாய்ப்பாலுக்கு நிகரானது

கண்டி, ஜூன் 25

கழுதைப்பாலில் தாய்ப்பாலுக்கு நிகரான ஊட்டச் சத்து காணப்படுவதாக பேராதனைப் பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞானத்துறைத் தலைவர் அசோகா தங்கொலியா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாரிலிருந்து இரண்டு பெண் கழுதைகளையும், ஒரு ஆண் கழுதையையும் பேராதனைப் பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கு எடுத்துச்சென்று ஆய்வுகளை மேற்கொண்ட போது, கழுதைப்பாலில் தாய்ப்பாலுக்கு நிகரான ஊட்டச் சத்து காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

இப்போது தொடர்ச்சியாக, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பசுப்பாலில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய சகல பாலுணவுப்பொருள்களையும் கழுதைப்பாலில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பீட்டளவில் கழுதையிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பாலின் அளவு பசுவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பாலின் அளவை விட குறைவாகவே காணப்படுகிறது.

எமது ஆய்வு வெற்றியளிக்கும் பட்சத்தில் கழுதைப் பாலை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாம் பெருமளவு அந்நியச்செலாவணியை ஈட்டிக்கொள்ளலாம் - என்றார். (ப-6)

## மலையகத் தலைவர்களுடன் கலந்துரையாடிய ஜெய்சங்கர்

கொழும்பு, ஜூன் 25

இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொடர்பாக இலங்கை - இந்திய வளர்ச்சிக் கூட்டாண்மை மற்றும் கூடுதல் ஒத்துழைப்பு குறித்து வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மலையகத் தலைவர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அண்மையில் இலங்கை வந்திருந்தபோதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அதன் பிரதித் தலைவர் வே. இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் மற்றும் உதயகுமார் ஆகியோரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் தேர்தல்கள் நிறைவடைந்ததன் பின்னர் சீதையம்மன் ஆலயத்தை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 4ஆயிரம் வீடுகளின் நிர்மாணப்பணிகள் மற்றும் அதன் பின்னர் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை மலையகத்தில் முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## சிக்கினார் பொன்சேகா தப்பினார் சேனாரத்ன!

கொழும்பு, ஜூன் 25



முன்னாள் இராணுவத்தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவுக்கு எதிராகக் கட்சி இந்த வாரம் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித்மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழு சரத் பொன்சேகாவுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கையை எடுப்பது என்பது தொடர்பாக ஆராய்வதற்காகக் கூடவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன பாராட்டி வருவது குறித்த கேள்விக்குப் பதிலளித்துள்ள ரஞ்சித்மத்துமபண்டார அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என குறிப்பிட்டுள்ளார். சரத் பொன்சேகா போன்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரை ராஜித சேனாரத்ன கடுமையாக விமர்சிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஊடகவியலாளர் வீடு மீது தாக்குதல்

## குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்

### எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 25



ஊடகவியலாளரின் வீட்டைத் தாக்கியவர்களும் அதனைச் செய்வித்தவர்களும் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த 13 ஆம் திகதி அச்சுவேலியைச் சேர்ந்த ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீடு தாக்கப்பட்டு வாகனங்களுக்கும் எரியூட்டப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்குத் தாக்குதலை மேற்கொண்டமை மிலேச்சத்தனமானதும் கண்டிக்கத் தக்கதுமான விடயமாகும். ஆனால் இதற்குப் பொறுப்பானவர்களும் இதனைச் செய்வித்தவர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. குறித்த விடயத்தை மேற்கொண்ட அனைவரும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் - என்றார். (ப-26)

## கட்சி மாறும் திட்டங்கள் பொய் என்கிறார் ராஜித

கொழும்பு, ஜூன் 25

அரசாங்கத்துடன் இணைந்து சுகாதார அமைச்சராவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று வெளியாகியுள்ள தகவல்களை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன நிராகரித்துள்ளார்.

ராஜித சேனாரத்ன ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் கலந்துகொண்ட பின்னர் அவர் அரசாங்கத்துடன் இணைந்து சுகாதார அமைச்சராகவுள்ளார் என ஊகங்கள் வெளியாகியிருந்தன.

இந்த ஊகங்களை நிராகரித்துள்ள ராஜித சேனாரத்ன அமைச்சர் பதவி குறித்தோ அல்லது வேறு விடயங்கள் குறித்தோ அரசாங்கத்துடன் எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவில்லை எனத் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தனிவழியில் பயணிக்க ஆலோசிக்கும் மொட்டு!

கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதித் தேர்தலின்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காதிருக்கும் முடிவை நோக்கி மொட்டுக்கட்சி நகர்ந்துகொண்டிருப்பதாக நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை மொட்டுக்கட்சி களமிறக்கத் திட்டமிடுகின்றது என்றும் தெரியவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வரும் கட்சிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களில் பெரும்பாலானவர்கள் ராஜபக்சக்களின்றி தேர்தலை சந்திப்பது சிறந்தது என ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். ராஜபக்ச அணியுடன் பயணித்தால் வெளியில் இருந்தே ஆதரவு வழங்கநேரிடும் எனக் கூறியமையால் மொட்டுக்கட்சி கடுப்பில் உள்ளது.

ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின்போதுகூட இது தொடர்பில் பஸில் ராஜபக்ச கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார். ரணிலுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளவேண்டும் என்ற நாமல் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் முன்வைத்துள்ள யோசனையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ப-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனை மீளச்செலுத்த 6 ஆண்டுகள் அவகாசம்

கொழும்பு, ஜுன் 25

**பரீஸ் கிளப் மற்றும் சீனா ஆகிய தரப்புகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை நாளை கைச்சாத்திடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

சர்வதேச நாணயநிதியம் அண்மையில் அறிவுறுத்தியிருந்தமைக்கு அமைவாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த உடன்படிக்கையின் கீழ் இலங்கை தமது கடன்களை மீளச் செலுத்துவதற்கு 6 ஆண்டுகால அவகாசம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஏ-இ)

# பறவைக் காய்ச்சல் அச்சம் இறக்குமதிகளுக்குத் தடை

கொழும்பு, ஜுன் 25

பறவைக் காய்ச்சல் பரவியுள்ள எந்தவொரு நாடுகளில் இருந்தும் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நாடுகளில் இருந்து விலங்குகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பல நாடுகளில் பறவைக் காய்ச்சல் பரவும் வேகம் அதிகரித்துள்ளது. இலங்கையில் பறவைக் காய்ச்சல் தொற்றைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# வெளியேறும் மருத்துவர்களால் நெருக்கடி

கொழும்பு, ஜுன் 25

கடந்த இரண்டு வருடங்களில் ஆயிரத்து 700 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்றும், இந்த எண்ணிக்கை இலங்கையிலுள்ள மருத்துவர்களின் பத்து வீதம் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவர்களின் வெளியேற்றத்தால் நூற்றுக்கு மேற்பட்ட கிராமப்புற மருத்துவமனைகளை மூடவேண்டிய நிலை தோன்றியுள்ளது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. (ஏ-25-6)

# நிறுவனங்களுக்கு எதிரான வழக்குகள் தேக்கம்

கொழும்பு, ஜுன் 25

ஊழியர் சேமலாப நிதியை செலுத்தத் தவறிய நிறுவனங்களுக்கு எதிராக சுமார் 15 ஆயிரம் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று அரசாங்கப் பொதுக் கணக்குகளுக்கான குழு வெளிப்படுத்தியது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான தொழிலாளர் திணைக்களத்தின் செயற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பொதுக் கணக்குகளுக்கான குழுவின் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட முகவரிகளில் நிறுவனங்கள் செயற்படாமை அல்லது நிறுவனங்கள், பணிப்பாளர்கள் அல்லது உரிமையாளர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றமை, நிறுவனங்கள் முழுமையாக நாட்டைவிட்டு வெளியேறுதல் போன்ற காரணிகள் வழக்குகள் தேக்கமடைவதற்கு காரணமாக அமைந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஏ-இ)




# மத்தியவங்கிக்கு துணை ஆளுநர்கள்

கொழும்பு, ஜுன் 25

இலங்கை மத்தியவங்கிக்குப் புதிய துணை ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மத்தியவங்கி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏ.ஏ.எம். தாசிம் மற்றும் ஜே.பி.ஆர். கருணாரத்ன ஆகியோரே துணை ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஏ-இ)

# தமிழக மீனவர்கள் 22 பேர் கைது இராமேஸ்வரத்தில் போராட்டம்!

சென்னை, ஜுன் 25

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 22 பேர் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தின் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கவேண்டும் என்று கோரியும், மீனவர்களை விடுதலைசெய்ய மத்திய மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


வேலைநிறுத்தப் போராட்டத்தால் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடற்கரையில் நங்கூரமிடப்பட்டிருந்தன. (ஏ-இ)




பாவியர் போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் எண்டு சொல்லுவினம். ஆனால் அப்பாவியள் எங்க போனாலும் சிலர் அள்ளுகொள்ளையா திட்டியெல்லோ தீர்க்கினம். யாழ்ப்பாணம் ரவுனுக்க ஹொஸ்பிட்டல் றோட்டில வேம்படிச் சந்தியிலையும், சத்திரத்துச்சந்தியிலையும் ரண்டு சிக்னல் இருக்கு. நேற்று சத்திரத்துச் சந்தியடியில ஒரு சம்பவம். அந்தச் சந்தியில சிக்னல் இருக்கிறதாலயும், கனபேர் யாழ்ப்பாண ரவுனுக்குள்ள வாறதுக்கும் போறதுக்கும் கூடப் பாவிக்கிறதாலையும் சத்திரத்துச் சந்தியடி எந்தநேரமும் சனநெருக்கடியாத்தான் இருக்கும். இந்த நெருக்கடி பத்தாது எண்டு, கடையளுக்கு சாமான் கொண்டுவாற வாகனங்கள் அந்த றோட்டில எந்தநேரமும் சமா வைக்கிறதால சனங்களும், வாகனங்களும் பாம்புமாதிரி வளைஞ்சு நெளிஞ்சுதான் அதுக்குள்ளால போய்வரோணும். ஏதோ முழுறோட்டும் தங்களுக்கே எழுதிவைச்சமாதிரி அந்த வாகனங்கள் அரைவாசி றோட்டை விழுங்கின படிதான் நிப்பாட்டுப்பட்டிருக்கும்.

இப்பிடி நேற்று ஒரு கடைக்கு முன்னால ஒரு வாகனம், றோட்டின்ர முக்கால்வாசிப் பக்கத்தில நிண்டு கொண்டிருக்க, அதில இருந்து சாமான்களை தூக்கிக் கொண்டுபோய் கடைக்குள்ள பறிச்சுக்கொண்டிருந்தினம். அப்ப ஒரு பொம்பிளை மோட்டர்சைக்கிளில அதால வந்திருக்கிறா. மூடையைத் தூக்கிக்கொண்டு நடுறோட்டால ஒராள் வந்ததைக் கண்டு மோட்டர்சைக்கிளின்ர வேகத்தைக் குறைச்சிருக்கிறா. அப்பிடியும் மூடை தூக்கின ஆள் றோட்டை விட்டு அரங்கேலை. அப்பிடியே மோட்டர் சைக்கிளை இடிக்கிறமாதிரியே வர, இவாடக் கெண்டு பிறேக் போட்டு மோட்டர் சைக்கிளை நிப்பாட்டிப் போட்டா. பிறேக்போடாட்டி அந்தாளை மோட்டர்சைக்கிள் மோதியிருக்கும். 'நல்லவேளையா ஒருத்தரிலும் மோதாமல், சேதமொண்டும் இல்லாமல் தப்பிட்டம்' எண்டு மோட்டர் சைக்கிளில வந்தவா கொஞ்சம் நிம்மதிப்பட, அங்காலிப் பக்கம் மல்ரிபரல் ஷெல்மாதிரி மூடை தூக்கிக் கொண்டு வந்தவர் தூசணத்தால கண்டபடி பேச வெளிக்கிட்டிட்டாராம்.

உந்தப் பொம்பிளையளுக்கு மோட்டர் சைக்கிளில ஏறினா கண்மண் தெரியாதோ? மனிசர் வேலை செய்ய வந்தால் உதுகள் உயிரை எடுக்காமல் விடமாட்டுதுகள் போல் எண்டு ஒவ்வொரு சொல்லுக்கும் இடையில் அடைமொழியா தூசணச் சொல்லுகளோட அந்த மூடை தூக்கிறவர் கத்த, மோட்டர் சைக்கிளில போன பொம்பிளைக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேலையாம். நடுறோட்டில அந்தாள் மூடை தூக்கிக் கொண்டு வந்து மோதுப்படப் பார்த்ததுக்கு இவா என்ன செய்ய ஏலும்? ஆரிட்டையும் உதவி கேக்கலாமெண்டா ஒரு பொம்பிளையை ஒராள் தேவையில்லாம கூடாத வார்த்தையால பேசுறதை தட்டிக் கேக்காமல் எல்லாரும் தங்கடபாட்டில போய்க்கொண்டிருந்திருக்கினம். அவ்வளவு ஏன், கொஞ்சம் தள்ளி ரண்டு பொலிஸ்காரர் இஞ்ச நடந்ததையெல்லாம் பார்த்தபடிதான் நிண்டிருக்கினம். அவையும் இப்பிடி நடுறோட்டில ஒரு பொம்பிளையை மூடை தூக்கிற ஆள், கண்டபடி பேசுறதை ஏனெண்டும் கேக்கலை. பொலிஸே இப்பிடி கண்டும் காணாதமாதிரி இருக்கேக்க பொதுமக்களுக்கு மட்டும் என்னெண்டு சமூக அக்கறை வரும்? அதைவிட றோட்டை மறைக்கிறமாதிரி, போக்குவரத்துக்கு இடையூறா அந்த றோட்டில நிக்கிற வாகனங்களை உந்தப் பொலிஸ்காரர் உரியபடி 'கவனிச்சால்' ஏன் சனங்கள் இப்பிடி அதால போய்வர கஷ்டப்படோணும்? பொலிஸ்காரர் தங்கட டியூட்டியை ஒழுங்காச் செய்யாட்டி இப்பிடி கண்டவன் நிண்டவன் எல்லாம் போய்வாற சனத்தைப் பேசுறது மட்டுமில்லை, அடிக்கவும் செய்வினம் தானே.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும்.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். வீட்டில் குடும்பத்தினருடன் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். மாலையில் பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.



# அமெரிக்காவை இலகுவாக வீழ்த்தியது இங்கிலாந்து!

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர்8 ஆட்டம் ஒன்றில் இங்கிலாந்து அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அமெரிக்க அணியை வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 18.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 9.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 117 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இங்கிலாந்து அணி சார்பில் ஜோஸ் பட்லர் 38 பந்துகளில் 83 ஓட்டங்களையும், சால்ற் 21 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர். (எ)

## ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு எதிரான மனு நிராகரிப்பு!

கொழும்பு, ஜூன் 25

ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக பொதுநிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை, ஓய்வூதிய முரண்பாடுகள் தீர்க்கப்படும் வரை இடை நிறுத்தி வைக்கவேண்டும் என்று ஓய்வூதியர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக பொதுநிர்வாக அமைச்சினால் 2020 இல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை இடை நிறுத்தி வைக்குமாறு ஓய்வுபெற்ற ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் திலகரத்ன உட்பட 95 பேர் சேர்ந்து தாக்கல் செய்த மனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மனுதாரர்கள், உரிய தரப்பினர் சட்டத்தை மீறியுள்ளனர் என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டனர் என நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. (எ-25-6)

## போராட்டத்துக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 25

ஆசிரியர்,அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்க்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் போராட்டம் கொழும்புகோட்டை புகையிரத நிலையம் முன்பாக நாளை புதன்கிழமை மு.ப 11 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்து வடமாகாண அதிபர்களையும் சுகவீன விடுமுறை அறிவித்து போராட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டும் என்று இலங்கை ஆசிரியர்அதிபர் தொழிற்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (எ-25)



## போராடி வென்றது தென்னாபிரிக்கா!

ரி- 20 உலகக் கிண்ண சுப்பர் 8 ஆட்டம் ஒன்றில் தென்னாபிரிக்க அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியை 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

அதன்பின்னர் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 17 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டு தென்னாபிரிக்க அணிக்கு 124 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 16.1 பந்துப் பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. (எ)

## தார் வீதிக்கான அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஜூன் 25

நாவலடி வீதியுடன் இணையும் நயினாதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலயத்தின் வீதியைத் தார் வீதியாக அமைக்கும் ஆரம்ப அடிக்கல் நடும் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.



நயினை வாழ் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் பெரியளவிலான அபிவிருத்தியாகக் குறித்த வீதியை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இன்னுமா நம்புகிறோம்?

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கமுடியாது என்று கைவிரித்துவிட்டது பிரிட்டன். புலிகள்மீதான தடையை மேலும் ஐந்துவருடங்களுக்கு நீடிப்பதாக இந்தியா கடந்தமாதம் அறிவித்திருந்த நிலையில், பிரிட்டனும் ஏறக்குறைய அதேமுடிவை வெளிப்படுத்தியிருக்கிறது. கூடவே புலிகள் மீதான தடையை விலக்குமாறு முறையீடு செய்திருந்த நாடு கடந்த தமிழீழ அரசு, தனிநாட்டை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக இலங்கை அரசாங்கம் சுமத்தியிருந்த குற்றச்சாட்டினையும் தாம் கவனத்திற் கொண்டதாக பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணையம் அறிவித்திருக்கிறது. இதன்மூலம் 'இலங்கை அரசாங்கம் பொய் சொன்னாலும் அதனைக் கண்ணைமூடிக்கொண்டு ஏற்போமேதவிர நீங்கள் சொல்லும் உண்மைக்கு ஆயிரமாயிரம் ஆதாரங்களை முன்வைத்தாலும் அதனை நாங்கள் ஏற்கமாட்டோம்'என்ற செய்தியையும் பிரிட்டன் சூசகமாக உணர்த்தியிருக்கிறது.

விடுதலைப்புலிகள் மீதான இந்தத் தடைகளுக்கெல்லாம் பிள்ளையார்சுழி போட்டவர் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த, பிறப்பால் தமிழரான லக்ஷ்மன் கதிர்காமர்தான். இந்தியாவில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னர் அந்த நாடு புலிகளுக்குத் தடைவிதித்திருந்தது. இதனை தனது வாதங்களுக்கு அடிப்படையாக்கி, 'விடுதலைப் புலிகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மக்களையும்,அரசியல் தலைவர்களையும் கொலை செய்யும் பயங்கரவாத அமைப்பு' என்ற விம்பத்தை மிகச் சாதுரியமாக கதிர்காமர் கட்டியெழுப்பினார். பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப்போல, அந்தச் சமயத்தில் அமெரிக்க இரட்டைக்கோபுரத் தாக்குதல் உலக ஒழுங்குகளைப் புரட்டிப்போட, 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற கோஷத்துடன் அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் புறப்பட்டன. இந்தப் பயங்கரவாதத்துக்கு எதிரான அலையில் கதிர்காமர் நீச்சலடிக்க ஆரம்பித்தார். அதன் விளைவாக, பல நாடுகள் சொல்லிவைத்தாற்போல விடுதலைப்புலிகளை ஏககாலத்தில் பயங்கரவாத அமைப்பாகக் கருதி தடைசெய்தன. ஆனால் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி தங்கள் ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்தகையோடு, விடுதலைப் புலிகள் என்ற அமைப்பே இல்லாமற்போனபின்பும் கூட, அந்த அமைப்பின் மீதான தடை நீங்கியபாடில்லை.

புலிகள் மீதான தடையை இந்த நாடுகள் விலக்கிக் கொள்ளாமைக்கு மிகமுக்கியமான காரணம், இலங்கை அரசாங்கத்தின் அழுத்தமே. இன்னமும் புலிகள் இயங்கிக் கொண்டிருப்பதான மாயத்தோற்றத்தை இலங்கை அரசாங்கம் கட்டமைத்து, அதனை உலகநாடுகளையும் நம்பவைக்க முயல்கிறது. எனினும் சர்வதேசத்துக்கு புலிகள் இனிமேல் வரமாட்டார்கள் என்ற உண்மை நன்கு தெரிந்தபோதிலும், இலங்கை அரசாங்கம் சொல்வதை நம்புவது போல நடிக்கவும் செய்கின்றன. ஏனெனில் புலிகள் மீதான தடையை நீடிப்பது அல்லது விலக்கிக்கொள்வது என்ற இரண்டு தெரிவுகளுமே அந்த நாடுகளுக்கு ஒன்றுதான். இதனால் அவற்றுக்கு சாதகமும் இல்லை, பாதகமும் இல்லை. ஆனால், இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்துக்கு மாறாக நடந்தால் பூகோளமயப்பட்ட சில சாதகங்களை அந்தநாடுகள் இழக்கும் நிலை ஏற்படலாம். எனவே 'அரசுக்கு அரசு' என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கே உலகநாடுகள் முன்னுரிமை கொடுக்குமென்பதே உள்ளங்கை நெல்லிக்கனியான விடயம். அது தெரிந்தும் இதே சர்வதேசநாடுகள்தான் இறுதிப்போரில் நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கும், அநீதிகளுக்கும் பரிகாரத்தைப் பெற்றுத்தருமென நம்பிக்கொண்டிருப்பதும், கிளிகள் இலவு காத்ததும் ஒன்றேதான்.





# இலங்கை - இந்திய பாலம் இறைமைக்குப் பாதிப்பாம்!



கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறுகின்றார்.

**கொழும்பு, ஜுன் 25**

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தரைப்பாலம் அமைக்கப்பட்டால் இலங்கையின் இறைமைக்கும் சுதந்திரத்துக்கும் ஆபத்து என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.**

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் இலங்கை தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகிவிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தென்னிந்தியாவிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் வந்து நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர் என்பதற்கு எங்கள் வரலாறு முழுவதும் ஆதாரங்கள் உள்ளன. யாருக்குப் பாலம் தேவை? இலங்கை மக்கள் விடுத்த வேண்டுகோள் காரணமாக இந்தத் திட்டம் குறித்து அவர்கள் ஆராயவில்லை. வெளிநாட்டவர்களின் வேண்டுகோள்கள் காரணமாகவே ஆராய்கின்றனர். இது குறித்து அவதானமாக இருக்க வேண்டும், இல்லாவிட்டால் தற்போது காணப்படும் நிலைமையை விட இன்னமும் மோசமான நிலைக்குக் தள்ளப்படுவோம் - என்றார். (எ-இ)

தனியார் கல்விக்காக

# 800 பில்லியன் ரூபாவை இறைக்கும் பெற்றோர்



கொழும்பு, ஜுன் 25

இலங்கையில் போதியளவு ஆசிரிய ஆளணி காணப்படுகிறது. இருப்பினும் 800 பில்லியன் ரூபாயை பெற்றோர் தனியார் கல்வி நிலையங்களில் பிள்ளைகளை கற்பிப்பதற்காக செலவிடுகின்றனர் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (எ-25-6)

## புதிய சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க!

கொழும்பு, ஜுன் 25

புதிய சட்டமா அதிபராக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்க நியமிக்கப்பட உள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் 31 ஆண்டுகள் பணியாற்றியுள்ள அவரின் பெயரை அரசமைப்புப் பேரவைக்கு ஜனாதிபதி விரைவில் பரிந்துரை செய்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளார் எனவும் அறியப்படுகிறது. (எ-இ)

## பணிப்புறக்கணிப்பு

வேதனம் அதிகரிக்கப்படாமை, பதவி உயர்வு வழங்கப்படாமை ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி நேற்றுமுதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்றுமுதல் 3 நாள்களுக்கு பணிப்புறக்கணிப்புப் போராட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது. என்று அந்தச் சங்கத்தின் தலைவர் குது கட்டபொலுகே தெரிவித்துள்ளார். (எ-இ)

## சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 25

இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 9 இலட்சத்து 66 ஆயிரத்து 604 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜுன் மாதத்தில் இது வரையான காலப்பகுதிக்குள் 69 ஆயிரத்து 825 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யா, இந்தியா, ஜேர்மனி, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

**நாளை**

26.06.2024

**புதன்கிழமை**

**ஆனி - 12**

சுபநேரம் : 04.25 - 05.55

ராகுகாலம் : 11.55 - 01.25

**நாளொரு நல்வார்த்தை**


**நீ வாழ்க்கையில் முன்னேறவேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப் போக விரும்பாதே.**

**நியேட்சே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸ் சேவை இன்றி ஐயன்கன்குளம் மக்கள் அவதி!

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



முல்லைத்தீவு, ஜூன் 25

**ஐயன்கன்குளம் மருத்துவமனையில் அம்புலன்ஸ் சேவையை நடத்த, முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமமான ஐயன்கன்குளம் கிராமத்திலுள்ள மருத்துவமனையை நம்பிப் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.

ஐயன்கன்குளம் மருத்துவமனையில் இருந்து மல்லாவி ஆதார மருத்துவமனை 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளதால், ஐயன்கன்குளம் மருத்துவமனையிலிருந்து மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் பயன்படுத்தப்படுகின்றது.

அம்புலன்ஸ் தற்போது திருத்தத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதால், இரு மாதங்களாக சேவையில் ஈடுபடவில்லை. இதனால், ஐயன்கன்குளம் மருத்துவமனையை நம்பியுள்ள குடும்பங்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

அம்புலன்ஸ் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-13)



இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா அண்மையில் ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது. இணுவில் கந்தப் பெருமான் ஆறுமுக வடிவினராக மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் வெளிவீதி உலா வந்தார். (எ-22-66)

# முல்லை. மருத்துவமனையில் ஊழியர்களிடையே மோதல்!

## பெண் ஊழியர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 25

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பெண் ஊழியர் ஒருவர் மீது, இன்னொரு பெண் ஊழியர் தாக்குதல் நடத்தினார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான பெண் ஊழியர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், தாக்குதலை மேற்கொண்ட பெண் ஊழியர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. தாக்குதலை மேற்கொண்ட பெண் தலைமறைவாகியுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முள்ளியவளைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ப-19)



உடுப்பிட்டி பத்திரகாளி அம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திரர் சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவில் ஜூன் 6 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை 'சமயமும் மக்களின் நடைமுறை வாழ்வும்' எனும் விடயப்பொருளில் தொடர் சொற்பொழிவாற்றிய செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த. குமரன் ஆலய பரிபாலனசபையினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (எ-25)

# மாந்தைகிழக்கில் சிக்கிய தேக்குமரக் குற்றிகள்

கிளிநொச்சி , ஜூன் 25

மாந்தை கிழக்குப் பகுதியில் சட்ட விரோதமாக தேக்க மரக் குற்றிகளை ஏற்றிச் செல்ல முற்பட்ட லொறி ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாங்குளம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாங்குளம் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மாங்குளம் வனவளப் பாதுகாப்புப் பிரிவினருடன் இணைந்து மாந்தை கிழக்கு செல்வபுரம் பகுதியில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கால்நடைகளின் கழிவுகளால் மூடப்பட்டு, உருமறைப்புச் செய்யப்பட்டிருந்த நிலையில் பாரவூர்தியில் ஏற்றப்பட்டிருந்த 35 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்குமரக் குற்றிகள் இந்தச் சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டன.

பாரவூர்தியின் சாரதி மற்றும் உதவியாளர்கள் தப்பியோடிய நிலையில் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்ட தேக்கு மரக் குற்றிகள், மாங்குளம் வனவளப் பாதுகாப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணை களை முன்னெடுத்துள்ள மாங்குளம் வனவளப் பாதுகாப்புப் பிரிவினர், எதிர்வரும் புதன்கிழமை மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-22-35)





# அரசின் அசமந்தப் போக்கால் அடிமாட்டு விலையில் நெல்!

## கிளிநொச்சி விவசாயிகள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜூன் 25

அரசாங்கம் உரிய நேரத்தில் நெல்லைக் கொள்வனவு செய்யத் தவறுவதால், அதைப் பயன்படுத்தி, தனியார் மிகக்குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று கிளிநொச்சி விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள குடமுருட்டி குளத்தின் கீழ் 340 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்ட நிலையில் தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யாமையால் தனியாருக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெல்லை நிர்ணய விலையில் அரசாங்கம் கொள்வனவு செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள விவசாயிகள், விளைச்சல் குறைவாகக் காணப்படுவதால் தற்போது ஒரு மூடை 6 ஆயிரத்து 500 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகின்றது என்று சுட்டிக்காட்டுகின்றனர். (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடையின் கீழ் வராத தலைவர்களை வீசுவோம்

## வடக்கு மாகாணக் கடலோடிகள் அமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் எனும் ஒரே குடையின் கீழ் வராத அனைவரும் சாக்கடைப் புழுக்களே. அவர்கள் தூக்கித் தூரத்தில் வீசப்பட வேண்டியவர்கள்.

-இவ்வாறு வட மாகாணக் கடலோடிகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கா.அண்ணாமலை, யாழ்.வட மராட்சி ஊடக இல்லத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களுக்கு சிறந்த தலைமைத்துவமில்லை. பல்வேறு நிலைகளாக நாம் சிதறுண்டு காணப்படுகின்றோம்.

நாங்கள் ஒரு குடையின் கீழ் ஒன்று சேரவேண்டும். ஒன்றுசேராத அத்தனை கட்சிகளுக்கும் நாங்கள் தகுந்த பாடம் படிப்பிக்கவேண்டும்.

அனைத்து தமிழ் மக்களும் ஒரு குடையின் கீழ் நின்று எவருக்கும் அஞ்சாமல் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான பயணத்தை முன்னெடுக்கவேண்டும்.

நாங்கள் தமிழ்ப்பொதுவேட்பாளர் எனும் ஊன்றுகோலை கையிலெடுத்தவுடன் தென்னிலங்கையிலிருந்து அனைத்து அரசியல் தலைவர்களும் வடக்குக்கு ஓடி வருகிறார்கள். எனவே நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரே குடையின் கீழ் தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்கவேண்டும் - என்றார். (ச-66)




கல்விக்கு உரமூட்டும் 'வெண்கரத்தின்' அறப்பணியின் தொடர்ச்சியாக, வட்டுக்கோட்டை முதலிகோவிலடி கிராமத்தில் முன்பள்ளிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடுகை நிகழ்வு, 'வெண்கரம்' தன்னார்வ அமைப்பின் 'கல்விக்கு கரம் கொடுப்போம்' எனும் கருத்திட்டத்துக்கமைய, அம்பாள் சனசமூக நிலைய வளாகத்தில், சனசமூக நிலையத் தலைவர் செ.நிஷாந்தன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-100)



### மணிவிழா

யாழ்., ஜூன் 25

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, தற்போது ஓய்வு பெற்றுச் செல்லும்பொ.இரவிச்சந்திரனைக் கௌரவிக்கும் மணிவிழா நிகழ்வு, நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அதிபர் த.திரிகரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-20)

நோயாளரோடு வருபவர்களுக்காக

# - சிவசி இல்லம் - சேவைமையம் யாழ்.போதனாவில் திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.போதனா மருத்துவமனைக்கு நோயாளிகளுடன் வருகின்ற உறவினர்கள் மற்றும் உதவியாளர்களின் வசதிகருதி 'சிவசி இல்லம்' என்ற பெயரிலான சேவைமையம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் இயங்கும் 'சிவசி' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிதியனுசரணையில் யாழ்.போதனா மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த இலவச சேவை இல்லம் இல.76 மருத்துவமனை வீதி (சத்திரச்சந்திக்கு அப்பால்) அமைக்கப்பட்டுள்ளது.

தூர இடங்களிலிருந்து யாழ்.போதனா மருத்துவமனைக்கு நோயாளர்களுடன் வரும் உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள், நோயாளிகளை யாழ். போதனா மருத்தவமனையில் சிகிச்சை பெறும் காலப்பகுதியில் அங்கு ஓய்வெடுக்கக் கூடிய வகையில், படுக்கை அறைகள், குளிப்பறைகள் உள்ளிட்ட வசதிகள் அங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த இலவச சேவையை நலன்புரிச் சங்க நோயாளர் பராமரிப்பு காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுதிகளுக்குப் பொறுப்பான தாதியரின் பரிந்துரைக்கமைய பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த திங்கட்கிழமை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றும் மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ- ச-26-66)

# தேசநலனுக்கு அர்ப்பணித்தவர் மருத்துவர் ஜெயகுலராஜா!

## பொ-பொ இயக்கம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

தனது வாழ்நாளில் அதிகமான காலப்பகுதியை தேச விடுதலைப் பணிக்காக - தமிழினத்தின் ஒப்பற்ற உயரிய உன்னத விடுதலைப் பணிக்காக அர்ப்பணித்தவர் மாமனிதர் மருத்துவர் ஜெயகுலராஜா.

அவர் எம் தேச ஆன்மாவில் நீக்கமற நிலைத்து ஈழத்தமிழர் வரலாற்றில் தனிமனித சரித்திரமாக மிளிர்கின்றார் என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

இளம் மருத்துவராக ஜெயகுலராஜா பணிபுரிந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கை அரசின் இன ஒடுக்குமுறையும் தாயகத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பும், அடக்குமுறையும் உச்சம் பெற்றிருந்த நிலையில் தனது உயிரைக் கூட ஒரு பொருட்டாக எண்ணாது ஈழத்தமிழ் மக்களுக்கும், போராளிகளுக்கும் தனது மருத்துவப் பணியையும், மனிதநேயப் பணியையும் மிக அர்ப்பணிப்புடன் வழங்கினார்.

கடும்போரும், வன்முறைகளும் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் தேச விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து அரும்பாடுபட்டுப் பணியாற்றிய ஒரு தியாகச் செம்மலை எம் தேசம் இன்று இழந்து நிற்கிறது.

எம் தேசத்தின் ஆன்மாவிலும், மனங்களிலும் அவர் நிரந்தரமாக வாழ்வார்- என்றுள்ளது. (ச-66)



முள்ளியவளை, நாவற்காடு குபேரன் மகளிர் குழுவுக்கு சுழற்சி முறை கடன் திட்டத்துக்கு நிதியுதவி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டது.

ஜேர்மனியில் வசிக்கும் கந்தசாமி சந்திரன் என்பவரின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த நன்கொடை வழங்கப்பட்டது. (ப-13)



சைவமரபுப் பாரம்பரியம்மிக்க கதிர்காமப் பாதயாத்திரைக் குழுவினருக்கு, அம்பாறை - பொத்துவில் குண்டுமடுக் கிராமத்திலுள்ள ஸ்ரீமுருகன் ஆலயத்தில் வைத்து, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒருதொகுதி உதவிப் பொருள்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று, ஆறாம் கட்டமாக இந்த உதவிகளை வழங்கினார். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசமைப்புடன் விளையாடாதீர்!

## விஜயதாஸ எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

"அரசமைப்புடன் எவரும் விளையாட முடியாது. விளையாட இடமளிக்கவும் மாட்டோம். எனவே, உரியவகையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்" - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன் என்பதுடன் அதில் வெற்றிபெறுவதும் உறுதி. அவ்வாறு வெற்றிபெற்ற பின்னர் எனக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் எல்லாம் அரசமைப்பின் பிரகாரம் வலுவற்றதாகிவிடும். இதனால் கட்சித் தலைமைத்துவம் தொடர்பிலும் பிரச்சினை எழாது. ஜனாதிபதித் தேர்தலை பிற்போட எவருக்கும் இடமளிக்கமாட்டோம். அரசமைப்புடன் விளையாட எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. எனவே, உரிய நேரத்தில் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். அது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை" - என்றார். (அ-44)

## வீரமாகாளியம்மனில்

# கைகலப்பு; மூவர் கைது!



யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம், வீரமாகாளியம்மன் ஆலய உற்சவத்தின்போது குழப்பத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில், வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் வீரமாகாளியம்மன் கோயில் மஹோற்சவம் அண்மையில் இடம்பெற்று முடிவுக்கு வந்துள்ளது.

உற்சவ காலத்தின்போது ஆலயத்தில் கைகலப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. ஆலயத்தின் நிர்வாகம் தொடர்பில் உள்ளக முரண்பாடுகள் தொடர்ந்து வந்த நிலையிலேயே இந்தக் கைகலப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, குழப்பத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபரொருவரை விளக்கமறியலில் வைக்குமாறும், மற்றைய இருவரையும் பிணையில் விடுவிக்கலாமெனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-26)

### அலுவலக உதவி பெண் பணியாளர் தேவை

"அலுவலக உதவிப் பெண் பணியாளர் தேவை. கணக்கியலும் கணினி அனுபவமும் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிபரக்கோவையை **சைவ பரிபாலன சபை, இல.66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(cs.55486) (N-1)

**021 222 7678**

### தேவை

"சைவபரிபாலன சபையின் அகில இலங்கை தேர்வுகளுக்கான சான்றிதழ்கள் அச்சுபதிக்க வேண்டியுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் அதற்குரிய விபரங்களை சபை அலுவலகத்தல் பெற்று விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்ப முடிவு திகதி 01.07.2024**

(cs.55486) (N-1)

**021 222 7678**

### வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை ஸ்கந்தா பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப் படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CS/55418) J-1

**077 417 9120, 076 358 2126, 076 225 4729**

**Whats app:- 0091 915 954 0807**

### வைரவர் உற்சவம்

யாழ்., ஜூன் 25

கோப்பாய் வடக்கு, இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வைரவர் உற்சவம், இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6மணிக்கு நடைபெறும்.

சிறப்புப் பூசை இடம்பெறுவதோடு தேரடி வைரவருக்குச் சிறப்புப்பொங்கல் நிகழ்வும் இடம்பெறும். (ப-17)

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி **இராசலட்சுமி இராஜசேகரம்**

(ஓய்வுநிலை உப அதிபர் – யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

மண்ணில் 23 . 07 . 1956

விண்ணில் 25 . 06 . 2021



(CS/55482) J-1

அன்பினை அள்ளி வழங்குவதில் நாயகியாய். வீடுதேடி வருபவர்களுக்கு பாசத்துடன் விருந்தோம்புவீர். எல்லா நொடிகளிலும் துணிவுடன் நடப்பீர். மாதப்பிறப்போ. வெள்ளி. செவ்வாய் பாராமல் துன்பம் இடர்படுபவரின் மனமறிந்து காப்போ. சங்கிலியோ கழற்றிக் கொடுத்து உதவும் கொடையாளியே எங்கு சென்றீரோ ?

மாதகல் வடக்கு,
மாதகல்.

### 9வது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் திரு. S.P. நடராசா**

**(அண்ணா தொழிலக அதிபர்)**

**25.06.2024**

ஆண்டுகள் பல ஆனாலும்
உங்கள் நினைவுகள் - நம் நெஞ்சில்
நீங்கள் இட்ட வழியில்
உங்கள் ஆசியுடன்
தொடர்ந்து பயணிப்போம்

**அண்ணா தொழிலகம்**
**ஊழியர்களும், உறவினர்களும்.**

(CR42710) J-1

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 10 . 1951

மறைவு 21 . 06 . 2019



அமரர்

**செல்லையா சிவலிங்கம்**

**திதி : சதுர்த்தி (25.06.2024)**

அவர்களின் ஐந்தாம் ஆண்டு நிகழ்வு இன்று (25.06.2024) செவ்வாய்க்கிழமை அவரது நினைவாக அஞ்சலி செலுத்துகின்றோம்.

**இல.55, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**
**077 376 8952**

**மைதிலி நகை மாடம் (PVT) Ltd.**
**89 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச உளவியல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் கல்லூரியின் ஒழுங்குபடுத்தலில், யாழ். மாவட்டப் பாடசாலைகளை மையமாக வைத்து, ஒரு நாள் சர்வதேச உளவியல் செயலமர்வு, மேற்படி கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலையில் புத்தகக் கல்வி சுமையாக இருக்கும் உயர்தரப் பிரிவு மாணவர்கள் வாழ்க்கையின் யதார்த்தங்களைப் புரிந்துகொண்டு தம் வாழ்வை சரியானவழியில் நெறிப்படுத்தவும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இச்செயலமர்வின் ஊடாக, மாணவர்கள் வழிகாட்டலைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் ஆசியபசுபிக் பாடசாலை உளவியல் அமைப்பினர், விரிவுரையாளர்கள், உளவியல் ஆலோசகர்கள், பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர்கள், யாழ். மாவட்ட குருமுதல்வர், கல்வி உளவியல் சார் குருக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப)





# சூழலியல் விழிப்புணர்வுச் செயலமர்வு

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சி மகா வித்தியாலய உயர்தர மாணவர்களுக்கான சூழலியல் விழிப்புணர்வுச் செயலமர்வு மேற்படி பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் ஒபர் லங்கா நிறுவனத்தின் அனுசரணையில், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி இளவேந்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள், பிரதி அதிபர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-214)




# சைக்கிள் பரிசு வென்ற நடேஸ்வரா மாணவன்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட வீதிப் போக்குவரத்துத் தொடர்பான விழிப்பூட்டல் சித்திரப்போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் தரம் - 7 மாணவன் வி.கரிஸ்கர் முதலாமிடம்பெற்று துவிச்சக்கரவண்டியைப் பரிசாகப் பெற்றுள்ளார்.

தரம் -7 ஐச் சேர்ந்த கே.சந்தனு, கே.நிவர்திகன், எஸ்.திஷானிகா மற்றும் தரம் -8 ஐச் சேர்ந்த பி.வைஷ்ணவன் ஆகிய நான்கு மாணவர்கள் தலா 5 ஆயிரம் ரூபா பணப்பரிசில்களை தனதாக்கினர். (ச-555)



சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பிரிவினரால் கடந்த புதன்கிழமை மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய மாணவர்களுக்கான சித்திரச் செயலமர்வு நடத்தப்பட்டது. செயலமர்வில் சிற்பச் சித்திர வல்லுநர் கலாபூஷணம் சுப்பிரமணியம் பத்மநாதன் வளவாளராகக் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினார். (ம-66-22)



# வடமாகாண ரீதியிலான தெளிவூட்டல் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 25

2023 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் தொடர்பாக வடமாகாண ரீதியிலான தெளிவூட்டல் கலந்துரையாடல் ஒன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கா தலைமையில் கிளி. மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள்,மேலதிக மாவட்டச் செயலர்கள், ஐந்து மாவட்டங்களின் உதவித்தேர்தல்கள் ஆணையாளர்கள், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர்,தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகளைச்சேர்ந்தோர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், தேர்தல் தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தார். தாம் தேர்தலுக்கு எப்போதும் தயார் எனவும் அரசியலமைப்பின் பிரகாரம் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தல் நடைபெற்ற நிலையில் தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடத்தவேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-22-113)





சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர் சைவப்புலவர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு மகாபாரதத் தொடர் சொற்பொழிவின் ஒரு பகுதியை ஆற்றினார். (அ-25-66)



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜூன் 25

இஸ்லாமியர்களின் தியாகத் திருநாளை முன்னிட்டு சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு இஸ்லாமிய மன்றத் தலைவர் வை.பர்சாத் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கலாசாலையின் இரண்டாம் வருட விஷேட கல்விநெறி ஆசிரிய மாணவி மு.அ.அஸ்மிலா பேகம் ஈகத் திருநாள் பற்றிய விளக்க உரையையும், இஸ்லாமிய மன்றக் காப்பாளர் திருமதி சர்மிளா பாஸ்கரன் ஆசியுரையையும், விரிவுரையாளர் வே.சேந்தன் 'இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும் சமூக விஞ்ஞானப் பார்வையும்' எனும் பொருளில் உரையாற்றினார்.

கலாசாலை ஆசிரிய மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றதுடன்,கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை நிகழ்த்தினார். (அ-22-66)




# 'பின் முள்ளிவாய்க்கால்' நூல் ஆய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25

சிவில் சமூகச் செயற்பாட்டாளர் அருட்தந்தை எழில் ராஜன் ராஜேந்திரம் எழுதிய 'பின் முள்ளிவாய்க்கால்' நூலின் ஆய்வுநிகழ்வுயாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், நிகழ்வின் நூலாசிரியர் அருட்தந்தை எழில்ராஜன் ராஜேந்திரம், யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ். பல்கலைக்கழகத்தின் அரசியல் துறைதலைவர் பேராசிரியர் கே.கணேசலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி குருபரன் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும்கலந்துகொண்டனர். (அ-22-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடத்தல் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு!

வவுனியா, ஜூன் 25

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் நிறுத்தாமல் சென்ற வாகனத்தின் மீது, துப்பாக்கிச் சூடு நடத்தி பல இலட்சம் பெறுமதியான மரங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகரவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரால், ஓமந்தை - பாலமோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு விசேட கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது, மரங்களை ஏற்றி வந்த பிக்கப் ரக வாகனம் பொலிஸாரை மோதித் தள்ளும் வகையில் செயற்பட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றது. அதனால் பொலிஸார் வாகனத்தை நோக்கி 5 முறை துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனை அடுத்து வாகனத்தை கைவிட்டு மரங்களைக் கடத்திச் சென்றவர்கள் தப்பி ஓடினர். கடத்தல் வாகனத்தைக் கைப்பற்றிய பொலிஸார் அதில் இருந்து சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான மரங்களை மீட்டனர். கடத்தலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள தாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-22-18)

## தொழிற்சாலையில் தீ விபத்து!

வவுனியா, ஜூன் 25

வவுனியா, மரக்காரம்பளை பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலையுடன் இணைந்த களஞ்சியசாலை ஒன்றில் நேற்றுத் திங்கட்கிழமை திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தில் தொழிற்சாலை முழுமையாக எரிந்து சாம்பராகியதுடன், பல இலட்சம் ரூபா பெறுமதியான அலுமினியம், பிளாஸ்ரிக் என்பவற்றாலான வீட்டுத் தளபாடங்கள் தீயில் நாசமாகின.

அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த இருவர் சாப்பாட்டுக்காக வெளியில் சென்ற நிலையிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்தையடுத்து பொலிஸ், இராணுவம் மற்றும் அந்தப் பகுதி மக்கள் என்போருடன் இணைந்து வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் தீ விபத்துக்கான காரணம் குறித்து ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-22-18)

## மரண வேகத்தால் கரணமடித்த ஓட்டோ!

யாழ்ப்பாணம், ஜூன் 25

முன்னால் சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியினை முந்த முற்பட்ட மற்றுமொரு முச்சக்கர வண்டி வேலிக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது.

மானிப்பாய் - கோப்பாய் பிரதான வீதியில் முச்சக்கர வண்டியொன்று நேற்றுப் பயணித்துக்கொண்டிருந்தது. உரும்பிராய் சந்திக்கு அண்மையாக குறித்த முச்சக்கரவண்டி, முன்னால் சென்ற இன்னொரு முச்சக்கர வண்டியை முந்த முற்பட்டவேளை, எதிரே வந்து கொண்டிருந்த ஹைஏஸ் ரக வாகனத்துடன் மோதி வேலிக்குள் புகுந்து குடை சாய்ந்தது. இதில் முச்சக்கர வண்டி சாரதி காயமடைந்தநிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை கோப்பாய் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் (அ-27-125)


## பல்கலைக் கற்கைநெறிகள் உரியகாலத்தில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

2025 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் கற்கைநெறிகள் உரியகாலத்தில் ஆரம்பமாகும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தற்போது மாணவர்களின் பதிவுகள் யாவும் 'ஒன்லைன்' மூலமாக நடைபெற்று வருவதாகவும், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தாலும் கூட, பல்கலைக்கழகம் சாராத வளங்களினூடாக இந்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

"தற்போது முதலாம் வருட மாணவர்களின் விரிவுரைகள் முடிவடைந்து அவர்கள் இரண்டாம் வருடத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் வருட மாணவர்களுக்குரிய விரிவுரைகள் 'ஒன்லைன்' மூலம் நடைபெற்று வருகின்றன. எனவே புதிய மாணவர்களின் கற்கைநெறிகளும் உரிய காலத்தில் ஆரம்பமாகும்" என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-6)



## நிர்வாக அதிகாரிகள் சுகவீனப் போராட்டம்

கொழும்பு, ஜூன்25

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் இன்றும் நாளையும் இரு நாள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

"நேற்று நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் தமது கொடுப்பனவு அதிகரிப்பு கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது" என்று தெரிவித்துள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம், தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த சுகவீனப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. (அ-6)




உலக குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு, யாழ்.போதனா மருத்துவமனையின் பிராந்திய இரத்த வங்கியின் ஏற்பாட்டில், குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு, யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ப-66)



## அப்துல் ஹமீட் நலமுடன்!

கொழும்பு, ஜூன் 25

புகழ்பெற்ற அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீட் காலமாகிவிட்டதாக நேற்றுத் திங்கட்கிழமை வதந்தியொன்று சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டது. எனினும், அவர் மிக நலமுடன் உள்ளதாக அவருக்கு நெருக்கமான தரப்பினர் உறுதிப்படுத்தியுள்ளனர். அவர் நலமுடன் இருக்கும் புகைப்படங்களையும் அந்தத் தரப்பினர் பலரும் வெளியிட்டுள்ளனர். (அ-66)

## மின்கட்டணத் திருத்தம்: ஜூலை 15 இல் அறிவிப்பு

மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்வது தொடர்பாக எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

"மின்சாரக் கட்டணத்தில் திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பாகப் பொதுமக்களிடம் எழுத்து மூலமாகக் கருத்துகளைப் பெறும் நடவடிக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட உள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பொதுமக்களிடம் கருத்துக்கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது" என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவேட்பாளரே...

- இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

கைதடியில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; பொதுவேட்பாளருக்கு ஆதரவாகவும், எதிராகவும் பல கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. நானும் இந்தப் பொதுவேட்பாளருக்கு ஆதரவானவன். ஜனாதிபதித் தேர்தலில் காலாதிகாலமாக இலங்கையின் தேசியக் கட்சிகளுக்கே தமிழ் மக்களாகிய நாம் வாக்களிக்கப் பழகியிருக்கின்றோம்.

பொதுவேட்பாளராக தமிழர் வெற்றிவாகைசூடமுடியாது என்பதும், எந்த ஒரு தமிழனும் ஜனாதிபதியாக இலங்கையில் வரமுடியாது என்பதும் எமக்கு நன்கு தெரியும். ஆனால், இங்கே வெற்றி, தோல்வியென்பதற்கு அப்பால், எமது உரிமைக்கான குரலை அழுத்தமாக வெளிப்படுத்தும் ஒரு கருவியாக பொதுவேட்பாளரை முன்னிறுத்த வேண்டும்.

மீண்டும் இந்த பதிமூன்றாவது திருத்தம் பற்றிய கதையாடல்கள் மேலெழத் தொடங்கிவிட்டன. பொதுவாகத் தேர்தல் காலங்களில் பதின்மூன்றாம் திருத்தத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் கதைத்து, அதனை மூலதனமாக்கி வாக்குகளை அள்ளுவது பேரினவாத வேட்பாளர்களுக்குக் கைவந்தகலை. அதையே இப்போதும் செய்யத் தொடங்கி இருக்கின்றனர். இம்முறை ஜனாதிபதித் தேர்தல்களத்தில் மூவர் போட்டியிடப் போவது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது. ஆனால், அவர்களின் தலைவிதி தமிழர்களின் கையில் என்பதால்தான், அந்த மூவரும் அடிக்கடி வடக்குக்கு வருவதை வாடிக்கையாக்கிவிட்டார்கள்.

தமிழ் மக்களை சிங்களப்பேரினவாதம் கிள்ளுக்கீரையாக அடக்கியாள நினைத்தது. எப்பொழுது விடுதலைப் புலிகள் மீண்டும் திருப்பியடிக்கத் தொடங்கினார்களோ அன்றிலிருந்து தான் தமிழர்கள் மீது கைவைப்பதை சிங்களப் பேரின அரசு நிறுத்தியது. இப்பொழுது புலிகள் இல்லையென்பதால், மீண்டும் பழையபடி தமிழர்களை அடக்கியொடுக்க நினைக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு முழுவதுமே இப்போது புலனாய்வாளர்களின் தீவிரக் கண்காணிப்பில் வந்துவிட்டது. தமிழ்மக்கள் எங்கு சென்றாலும் அவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள். ஒரு கருத்தைக் கூட சுதந்திரமாகச் சொல்லவிடாமல் தடுக்கிறார்கள். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நாம் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். இனியொரு ஆயுதப்போராட்டத்தை தமிழர்கள் இப்போதைக்கு சிந்தித்துக்கூடப்பார்க்கமுடியாது. அப்படிப்பட்ட கையறு நிலையில் எமது உரிமைகளை வென்றெடுக்க புதிய வழிகளைக் கண்டறியவேண்டும். அப்படியான புதிய வழிகளுக்கான முதற்படியாக, புலிகள் இல்லாத இந்தக் காலத்தில் எமதினத்தின் புதிய ஆயுதமாக பொதுவேட்பாளரை மாற்றுவோம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-125)

## பந்தாடியது...

நேற்று மாலை 5 மணியளவில் நேருக்குநேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்தும், வவுனியா பகுதியில் இருந்து மன்னார் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுமே முருங்கனுக்கும் கற்கிடந்தகுளம் கிராமத்துக்கும் இடையில் உள்ள ரயில் கடவைப் பகுதியில் நேருக்குநேர் மோதிக்கொண்டன. இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞர், சம்பவ இடத்திலேயே பலியானார்.

நானாட்டான், சாளம்பன் - நாகசெட்டியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தீபன் (வயது -35) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

சடலம் முருங்கன் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணையை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-213)

## புறக்கணிப்பு...

தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்று உயர்கல்வியமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்குச் சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்தில் தாம் இன்று முதல் தமது புறக்கணிப்பைக் கைவிட்டு பணிக்குத் திரும்பலாம் எனவும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக அரசாங்கத்துக்கு ஒரு நாளைக்கு 150 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## 9 பவுண்...

என. இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அவர்கள் உள்ளே சென்று பார்த்தபோது, அங்கிருந்த 9 பவுண் நகைகள் திருடிச் செல்லப்பட்ட விடயம் தெரியவந்தது. இதுதொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் வீட்டாரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குற்றத்தடயவியல் பொலிஸாரும் அச்சுவேலிப் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-26)

## 'பளார்'!...

அதே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் சரமாரியாகக் கைகளால் தாக்கியுள்ளார். கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் பாதிப்படைந்த மாணவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (அ-25-19)

## பல்கலைக்கழகங்களை...

உறுதிப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கல்வியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர அவசரக்கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜெயசுந்தர நேற்று அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். அனைத்து அரச பல்கலைக்கழகங்களினதும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் சொத்துகள் என்பவற்றுக்கு விசேட பாதுகாப்புக் கட்டமைப்பொன்றை வழங்குமாறும், பல்கலைக்கழகங்களைச் சூழவுள்ள பகுதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கையை எடுக்குமாறும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இதனால் பணிப்புறக்கணிப்பை பலவந்தமாக முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், அரசாங்கம் படையினரை பல்கலைக்கழகங்களில் களமிறக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ-26)

## ஆர்ப்பாட்டம்...

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி தொடர்ச்சியாக 92 நாட்களாக சுழற்சி முறையிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், பிரதேச செயலகத்தின் நுழைவாயிலைப் பூட்டி, திடீரென பெரும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மட்டக்களப்பு - கல்முனை வீதியூடான போக்குவரத்து சில மணித்தியாலங்கள் தடைப்பட்டன. மருத்துவ சேவை வாகனங்கள் மாத்திரம் மக்களால் அனுமதிக்கப்பட்டன. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றநிலை உருவானதையடுத்து, மாவட்டச் செயலர் போராட்டக்காரர்களின் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அதனையடுத்து ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தபோதும், சுழற்சி முறையிலான போராட்டம் தொடர்கின்றது. (அ)

## மாணவி...

டுள்ளார். யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவரை தினமும் கல்வி நடவடிக்கைக்காக குறித்த சாரதியே தனது முச்சக்கரவண்டியில் அழைத்துச் செல்வார். நேற்றுமுன்தினமும் வழக்கம்போல மாணவியைக் கூட்டிச்செல்ல வந்தபோது, "எனது முச்சக்கரவண்டி பழுதடைந்துவிட்டது. அதனால் மோட்டார் சைக்கிளில் கூட்டிச் செல்கிறேன்" என்று மாணவியின் பெற்றோரிடம் கூறியுள்ளார். பின்னர் மோட்டார் சைக்கிளைச் செலுத்துமாறு மாணவியிடம் கூறிவிட்டு, தான் பின்னால் இருந்து மோட்டார் சைக்கிளைச் செலுத்தக் கற்றுத்தருவதாகக் கூறியுள்ளார். அதனை நம்பி, மாணவி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியபோது, பின்னால் இருந்த சாரதி, மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுக்க முயன்றுள்ளார். இதன் பின்னர் பெற்றோரிடம் மாணவி நடந்த விடயத்தைக்கூற, அவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்துக்குச் சென்று, சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்தனர். அதனையடுத்து 45 வயதுடைய சாரதி நேற்றுக் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-26)

## 204 இந்திய...

கைது செய்யப்பட்டுள்ளனரென்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தடைக் காலம் கடந்த 14 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. இந்நிலையில் கடந்த 18 ஆம் திகதி தமிழக மீனவர்கள் நால்வர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அடுத்தமாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தடைக் காலத்தின் பின்னரான காலப்பகுதியில் இரண்டாவது தடவையாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 22 இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-66)

## கருச்சிதைவு?...

என. கிளிநொச்சி, அறிவியல்நகர்ப் பகுதியில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றிலேயே, இவ்வாறு கருச்சிதைவு செய்யப்பட்ட எச்சங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. உடனடியாக இதுகுறித்து, கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்று கிளிநொச்சி பதில் நீதிவானும் விசாரணைகளை மேற்கொண்டார். (அ-113)

## படைமுகாமுக்குள்...

வளாகத்தில் நேற்றுமதியம் திடீரென ஏற்பட்ட தீப்பரவலால் அங்கு பெரும் பரபரப்பு நிலை ஏற்பட்டது.

அந்த இராணுவமுகாம் வளாகத்தில் கழிவுகளுக்கு வைக்கப்பட்ட தீயே, இவ்வாறு படைத்தளத்தைச் சூழவிருந்த பகுதிகளுக்கு எதிர்பாராதவிதமாகப் பரவியுள்ளது. உடனடியாக இந்தத் தீப்பரவல் குறித்து அறிவிக்கப்பட்டதையடுத்து, காங்கேசன்துறை பிரதான கடற்படை முகாமில் இருந்து தீயணைக்கும் பிரிவு விரைந்து வந்து, தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தது. (அ-125)

## மினி...

வன் காயமடைந்துள்ளான். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நேற்று மாலை திடீரென வீசிய பலத்த காற்றினால், காரைநகர், களபூமி பகுதியில் உள்ள பனைமரமொன்று முறிந்து, அருகில் இருந்த ஓலைக்குடிசை மீது வீழ்ந்தது. அந்தக் குடிசைக்குள் 4 அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பமொன்று வசித்து வந்தபோதும், தெய்வாதீனமாக பாரதூரமான பாதிப்புகளின்றித் தப்பினர். எனினும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவனுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டதையடுத்து, அவர் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளான். (அ-125)

## விஜயதாஸ...

தொரு முடிவை எடுப்பதற்குள் விஜயதாஸ ராஜபக்ச, தானாகவே பதவி துறப்பதற்குரிய சாத்தியம் இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நடவடிக்கை எடுத்துவருகின்றது. அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை சவாலுக்குட்படுத்தும் வகையில் ஒழுக்காற்று நடவடிக்கை அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பொதுத்தேர்தலில் மொட்டுக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட விஜயதாஸ ராஜபக்ச, தற்போது சுதந்திரக்கட்சியுடன் இணைந்து அந்தக்கட்சியின் தலைமைப்பதவியை ஏற்றுள்ளார் என்பதும், அந்தத் தலைமைப்பதவியை வகிக்க அவருக்கு நீதிமன்றத்தால் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டின் கடந்த காலத்தை நாம் மறந்துவிடலாகாது!

## நினைவூட்டுகிறார் ரணில்

**கொழும்பு, ஜூன் 25**

**நாட்டுக்குத் தேவையான மருந்துகள், எரிபொருள், உரம் போன்ற வற்றைக் கொள்வனவு செய்ய பணமில்லாமல் துன்பப்பட்ட கடந்த காலத்தை யாரும் மறந்துவிடக் கூடாது.**

இந்த இருண்ட அனுபவத்தை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லாமல் புதிய பொருளாதார மாற்றத்தின் ஊடாக இலங்கையை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் செயற்றிட்டத்தில் அனைவரும் கைகோர்க்கவேண்டும் -இவ்வாறு கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றபோது நாடு மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்தது. நாட்டில் அந்நியச் செலாவணி இல்லை.

தேவையான மருந்துகளையோ, எரிபொருளையோ கொண்டுவர பணம் இல்லை. கிடைக்கும் பணத்தை எரிபொருளுக்கு வழங்குவதா? அல்லது உரத்துக்கு வழங்குவதா? என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால், நாம் உரத்தைப் பெற்று விவசாயப் பணிகளை ஆரம்பித்தோம்.

அதன் ஊடாக உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு மருந்து மற்றும் எரிபொருளை மக்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தோம். அத்தகைய கடினமான சூழ்நிலையை நாங்கள் கடந்துவந்தோம்.

ஒரு நாடாக நாம் முதல் 6 மாதங்களை மிகவும் சிரமத்துடன் கடந்தோம். அதன்பிறகு நாடு படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியது. நாம் அனைவரும் சிரமப்பட்டு அந்த முடிவுகளை எடுத்ததால்தான் நாம் ஒருநாடாக முன்னோக்கி வருகிறோம்.

இப்போது நாட்டுக்கு புதிய செயற்றிட்டத்தை முன்வைத்துள்ளோம். பழைய முறையை விட்டுவிட்டு புதிய அமைப்பைக் கொண்டு முன்னேறவேண்டும். போட்டி நிறைந்த பொருளாதாரத்துக்கு நாம் திரும்பவேண்டும். செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவேண்டும். புதிதாகச் சிந்தித்து புதிய நாட்டை உருவாக்க நாம் கைகோர்க்க வேண்டும் - என்றார். (ச-இ)

# ராஜபக்சக்கள் இல்லாவிட்டால் நாட்டுக்கு காஸா நிலையாம்!

## பெரமுனக் கட்சி எம்.பி. கூறுகின்றார்

'ராஜபக்சக்கள் இல்லாவிட்டால் இந்நாடு பிளவுபட்டு, காஸாவின் நிலையே எமக்கு ஏற்பட்டிருக்கும். எனவே, ராஜபக்சக்களை ஒருபோதும் மறக்கமுடியாது. இது மக்களுக்கும் தெரியும்' என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்களின் ஆதரவு தேவையில்லை என நிமல் லான்சாதரப்பு கூறியுள்ள நிலையிலேயே, மொட்டுக் கட்சி எம்.பி. இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ராஜபக்சக்களால்தான் நாம் சுவாசிக்கின்றோம். ராஜபக்சக்களால்தான் இந்நாடு பிளவுபடுவது தடுக்கப்பட்டது. அவர்கள் இல்லாவிட்டால் காஸாவின் நிலைதான் இங்கு ஏற்பட்டிருக்கும். ராஜபக்சக்களால் தான் நாடு அபிவிருத்தியடைந்தது." - என்றார். (ப-44)

# செப்ரெம்பரிலேயே சா. / த. பெறுபேறு

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவிலேயே வெளியிடப்படுமெனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

சாதாரணப்பெறுபேறுகள் இன்னும் பத்து நாட்களில் வெளியாகுமெனத் தாம் நேர்காணலொன்றில் தவறுதலாகக் கூறியதால் உண்டான குழப்பங்களைத் தெளிவுபடுத்த அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-66)


### கதவு விற்பனைக்கு

இரும்பு சுருக்குக் கதவு
உயரம் 8' - 3" அகலம் 10' அடி
விற்பனைக்குண்டு.

**077 386 8572**

### வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவைக் கடை ஒன்றிற்கு **பெண் வேலையாட்கள் தேவை.**
சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள், வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது.

**076 632 3554**

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்**
**A-9 வீதி முகப்புடன் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

**Golden Real Estate (pvt) Ltd.**

**077-029 4164**
**077-329 4130**
**077-294 1521**

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
**மென்பான விநியோக நிறுவனத்திற்கு சாரதி மற்றும் உதவியாட்கள் தேவை.**
(யாழ். மாநகர சபைக்குள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: **076 561 5492**
**070 511 5335**

(CS 819) J-1

### வங்கி மீதி வசதி (SHOW MONEY)

**சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்**

தொடர்புகளுக்கு:

**074 173 7684**

(CS 777) J-1

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்

சகல நாடுகளுக்குமான விசேட விலைக்கழிவு
(மற்றய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்)

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்
0777 554 528

11 KG மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | - 1300/= |
| Canada | - 2400/= |
| Australia | - 2300/= |
| USA | - 2400/= |
| France | - 1990/= |
| Germany | - 1990/= |


### மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 08 . 1949

இறப்பு 24 . 06 . 2024

**அமரர் சின்னட்டி செல்வரத்தினம்**
**(மேசன் செல்வராசா)**

யாழ்ப்பபணம் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளம் சந்தி, விசுவமடு மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி செல்வரத்தினம் (மேசன் செல்வராசா) அவர்கள் நேற்று (24.06.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரம் - சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், இளையபிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி, சரஸ்வதி, தங்கவடிவேல் (கனடா), செல்வராணி (யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகிர்தா (ஆசிரியர் - ரூபன் முன்பள்ளி, நெத்தலியாறு), புலேந்திரராசா (புலேந்தி), கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஞ்சித்குமார் (ராசன் - பொய்கை உணவகம், புளியடிச்சந்தி, விசுவமடு), சகிதா, சிவரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிசோர், கோகிசன், லுகிர்தன், ரதுநிசா, ரேமிகா, ஹரிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2024) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணியளவில் விசுவமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 822) S-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 25. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org